1987 மே 5]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே, கூட்டுறவுத் துறையிலே 18 நூற்பாலைகள் இயங்குகின்றன. தமிழ்நாட்டில் 350 நூற்பாலைகள் தனியார் துறையில் இருந்தாலும், இவைகள் எல்லாம் ஏற்படுத்தப்பட்டிருப்பதே கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் வழங்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆகவே, இவைகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் வழங்கிக் கொண்டிருப்பதை நிறுத்த முடியாது. வெளி மார்க்கெட்டில் விற்பதை விட கொஞ்சம் விலை குறைவாகக் கொடுத்தால்தான நாம் நெசவாளர் பெருமக்களுக்கு நன்மை செய்வதாக இருக்கும். மேலும் கமிட்டி நிர்ணயம் செய்கின்ற விலைக்குத்தான் விற்கக்கூடிய நிலை இருக்கிறது. அதோடு ஒவ்வொரு கூட்டுறவு நூற்பாலையிலேயும் உற்பத்தியாகின்ற நூல் முழுவதையும் அப்படியே கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவைகள் வழங்குவது கிடையாது. மூன்றில் ஒரு பங்கை தான் வழங்குகிறார்கள். மூன்றில் இரண்டு பங்கு நூலை அவர்கள் வெளி மார்க்கெட்டில் விற்கலாம். ஆக, வெளி மார் கெட்டில் மூன்றில் இரண்டு பங்கு நூலை அதிக விலைக்கு விற்பதன் மூலம்தான் இந்த ஆலைகளை லாபத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே அவர்கள் நூலை கொடுக்க முடியாது என்று சொல்ல வழியில்லை. அது போல இன்றைக்கு எல்லா நூற்பாலைகளும் அரசிடம் கடன் கேட்கின்றன. அந்தந்த ஆலைகளுக்கு ஏற்ப அரசு தனியாக நிதித் துறையோடு கலந்து இது குறித்து பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட ஊட்டச்சத்து அலுவலர் பதவியிடங்கள்

603—(* வினா எண் 7352) திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல மாவட்டங்களில் மாவட்ட ஊட்டச்சத்து அலுவலர்கள் பதவி காலியாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை நிரப்ப அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வடஆற்காடு, செங்கல்பட்டு மற்றும் திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களில் மாவட்ட ஊட்டசத்து அலுவலர் பதவி நிரப்பப்படாமல் காலியாக இருந்தது.

(ஆ) நிரப்பப்படாமல் காலியாக இருந்த மேற்படி பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ள போதிலும், இத்திட்டத்தின் பணிகளின் முக்கியத்துவம் கருதி, இப்பதவிகள் துறையில் உள்ள அலுவலர் களைக் கொண்டு கூடுதல் பொறுப்பு அளித்து தற்காலிகமாக நிரப்பப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்.

604—(*வினா எண் 12069) **திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் 1987 ஆம் ஆண்டு மே மாதத்துடன் நிறுத்தப்பட்டு உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31—3—1987-ல் முடிவடைய இருந்த ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தை 31—3—1988 வரை நீட்டித்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம், குடவாசல் பஞ்சாயத்து யூனியன் முடிகொண்டான் ஆற்றில் படுகை அணை.

605—(*வினா எண் 7971) **திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம், அதம்பார் வாய்க்கால் தலைப்பில் முடிகொண்டான் ஆற்றில் ஒரு படுகை அணை கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.